DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

CC.No.28/2021

Deposition of Witness : LW9/PW9

| Name | ஜவ்வாதுஉசேன், காவல் ஆய்வாளர் | Taluk | |
|---|---|---|---|
| Father 's Name | முகமதுஜலீல் | Village | |
| Age | 43 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **04.03.2026.** | | | |

(Accused present)

**அரசு தரப்பில் முதல் விசாரணை:**

**1.** நான் தற்போது கள்ளக்குறிச்சி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். நான் பண்ருட்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது, நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் செல்வகணபதி, இவ்வழக்கில் புகார் மனு பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்காக என் பார்வைக்கு வைத்ததை நான் பார்வையிட்டு, எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, 09.02.2021 அன்று காலை சுமார் 7.00 மணியளவில் சம்பவயிடம் சென்று, சாட்சிகள் செல்வம், ஸ்ரீதர் ஆகியோர்கள் முன்பு சம்பவயிடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் வரைந்து, பார்வை மகசர் தயார் செய்து, பார்வை மகசரில் மேற்சொன்ன சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் பெற்று, அவர்களை விசாரணை செய்து, தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். **(மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ–5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** மேலும், இவ்வழக்கின் புகார்தாரரும், காயம்பட்ட நபருமான நடுவீரப்பட்டு காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் வெங்கடேசன் என்பவரையும், கண்ணுற்ற சாட்சிகள் சிவப்பிரியா, அன்னபூரணி, ராஜேஷ் ஆகியோர்களையும், 09.02.2021 அன்று விசாரணை செய்து, தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2. மேற்படி சாட்சிகளின் விசாரணையிலிருந்து வழக்கு சம்பவம் உண்மையென தெரியவந்ததில், வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியான பாவாடைராயன் என்பவரை தேடியதில் எதிரி கடந்த 09.02.2021 அன்று, காலை சுமார் 9.45 மணியளவில் பண்ருட்டி–லிங்க் ரோடு சந்திரப்பு அருகே உள்ள பைபாஸ் சாலையில் உள்ள பேருந்து நிறுத்தத்தில் இருந்தவரை அடையாளம் கண்டு, காரணம் கூறி கைது செய்து, நிலையம் அழைத்து வந்து, திரேக சோதனை செய்து, பாராவசம் ஒப்படைத்து, தக்க வழிக்காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

3. வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட மேற்சொன்ன வெங்கடேசனுக்கு சிகிச்சை அளித்த பண்ருட்டி அரசு மருத்துவமனை மருத்துவர் கார்த்திகேயன் என்பவரை 11.02.2021 அன்று விசாரணை செய்து, மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயம்

சொற்பகாயம் என்று  வழங்கிய காயச்சான்றை பெற்று, வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று ஏற்கனவே மேற்சொன்ன மருத்துவர் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்சொன்ன சிறப்பு உதவி ஆய்வாளர் செல்வகணபதியை கடந்த 11.02.2021அன்று விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 332, 506(ii) ன்படி 11.02.2021 அன்று இறுதி அறிக்கை தயார் செய்து, சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். எனது விசாரணையில் அ.சா.4, அ.சா.5, அ.சா.6 ஆகியோர்கள் அவர்களது கு.வி.மு.ச பிரிவு 161(3) வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதுபோல் சொல்லியுள்ளார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. முதல் தகவல் அறிக்கையில், 3வது காலத்தில், காலை 6.00 மணிக்கு தான் நிலையத்திற்கு தகவல் கிடைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா–1 தனது குறுக்கு விசாரணையின்போது, சம்பவம் நடந்த உடனே தனது அலைபேசி மூலம் நிலையத்திற்கு சம்பவம் குறித்து தகவல் கொடுத்துவிட்டதாக குறிப்பிட்டுள்ளார் என்றால், கொடுத்திருக்கலாம். ஆனால், முதல் தகவல் அறிக்கையின் 3வது காலத்தில் புகார் எப்போது பெறப்பட்டதோ, அதன் நேரம் குறிப்பிடப்பட்டிருக்கும். தகவல் பெறப்பட்டதும், நானும், என்னுடன் பணிபுரிந்த சில காவலர்களும் மருத்துவமனைக்கு வந்து, எதிரியிடம் சம்பவம் குறித்து விசாரித்தார்கள் என்று அ.சா–1 தனது குறுக்கு விசாரணையில் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்த நேரத்திலிருந்து 4 மணிநேரம் காலதாமதமாக நிலையத்திற்கு தகவல் கொடுக்கப்பட்டுள்ளது, மேற்படி கால தாமதத்திற்கான காரணத்தை நான் விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால், சம்பவம் நடந்த உடனேயே அ.சா–1 நிலையத்தில் உள்ள காவலர்களிடம் அவரது அலைபேசி மூலம் தகவல் தெரிவித்துவிட்டு, அதன் பின்னர் விபத்து பதிவேடு பதிவு செய்துவிட்டு, அதற்கு பிறகு காலை 6.00 மணிக்கு நிலையம் வந்து புகார் அளித்துள்ளார் என்று விசாரித்து தெரிந்துகொண்டேன். சம்பவம் நடந்த அன்று அதிகாலை 2.35 மணிக்கு அ.சா–1 குறிப்பாக என்ன பணி மேற்கெண்டிருந்தார் என்று விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால், பண்ருட்டி அரசு பொது மருத்துவமனையில் ஓ.பி பணியில் இருந்தார் என்று விசாரித்து தெரிந்துகொண்டேன். மேற்படி பண்ருட்டி அரசு பொது மருத்துவமனையில் ஓ.பி பணியில் இருந்தார் என்பது தொடர்பான ஜி.டி பதிவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

2. அ.சா–1ற்கு சம்பவம் நடந்த அன்று கொடுக்கப்பட்ட பணி சம்மந்தமான கையேட்டினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. சம்பவம் குறித்து, அ.சா–1 அவர் பணிபுரியும் நடுவீரப்பட்டு காவல் நிலைய அதிகாரிகளுக்கு தகவல் சொன்னாரா என்பது பற்றி விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால், தெரிந்து கொண்டேன். ஆனால், அதுப்பற்றி தனி அறிக்கை எதுவும் தாக்கல் செய்யவில்லை. எதிரி, அ.சா–1 ஐ தாக்க

பயன்படுத்தியதாக சொல்லப்படும் குளுக்கோஸ் ஏற்ற பயன்படுத்தப்படும் இரும்பு கம்பியினை கைப்பற்றி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. மகஜர் சாட்சிகள் 1 மற்றும் 2 ஆகியோர் தாங்கள் மேற்படி மருத்துவமனைக்கு எதிரே இருந்த கார் ஸ்டேண்டில் தாங்கள் நின்றுக்கொண்டிருந்தபோது, தங்களை போலிசார் விசாரித்ததாக கூறியுள்ளனர், அதுப்பற்றி நான் விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். மேற்படி கார் ஸ்டேண்ட் என்பது ஆம்புலன்ஸ் நிறுத்தப்பட்டிருக்கும் இடமாகும், அதுகுறித்து ஆவணங்கள் ஏதேனும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

3. சம்பவம் நடந்த இடத்தில் சிசிடிவி கேமரா இருந்ததாக அ.சா–1 தனது சாட்சியத்தில் கூறியுள்ளார், மேற்படி கேமராவின் பதிவினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், சிசிடிவி கேமரா இருப்பது உண்மைதான், ஆனால் சம்பவம் நடந்த இடத்தினை கவரேஜ் செய்யும் அளவிற்கு மேற்படி கேமரா இல்லாததனால், அதன் பதிவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. மகஜர் சாட்சிகள் 1 மற்றும் 2 சாட்சிகள், தங்களது சாட்சியங்களை பதிவு செய்த இடத்தில் சிசிடிவி கேமரா இருந்ததாக தனது சாட்சியத்தில் கூறியுள்ளார்கள், மேற்படி கேமராவின் பதிவினை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், சம்பவ இடத்தில் வைத்துதான் மேற்படி மகஜர் சாட்சிகளை விசாரணை செய்தேன், அந்த இடத்தினை கவரேஜ் செய்யும் அளவிற்கு மேற்படி கேமரா இல்லாததனால், அதன் பதிவினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. அ.சா–1 தனக்கு நன்கு தெரிந்த 2 நபர்கள் தன்னை தாக்கியதாக மருத்துவரிடம் கூறியுள்ளார், அந்த 2வது நபர் யார் என்பதனை விசாரணை செய்து தெரிந்துகொண்டேனா என்றால், அவர் மருத்துவரிடம் அந்த சமயத்திலிருந்த பதற்றத்தில் 2 நபர்கள் தன்னை தாக்கியதாக கூறிவிட்டார், ஆனால் அவரை தாக்கியது 1 நபர் தான் என்று, பின்னர் எனது விசாரணையில் கூறியுள்ளார். ஆஜர் எதிரியின் பெயர் மற்றும் விலாசத்தை கேட்டு தெரிந்துக்கொண்டதாக அ.சா–1 தனது நீதிமன்ற விசாரணையில் கூறியுள்ளார், அவர் யாரிடம் விசாரணை செய்து, மேற்படி விவரங்களை தெரிந்து கொண்டார் என்று நான் விசாரித்து தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. மேற்படி எதிரியும், அ.சா–1 ஆல் தாக்கப்பட்டு மேற்படி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்துள்ள நிலையில், எதிரியை விசாரணை செய்து, வாக்குமூலம் பெற்று, வழக்கு பதிவு செய்துள்ளேனா என்றால், அதுப்பற்றி தற்போது எனக்கு நியாபகமில்லை. அ.சா–1 என்னுடன் சேர்ந்து பணிபுரியும் அதிகாரி என்பதால், அவரிடமிருந்த பொய்யான புகாரை பெற்று, அவருக்கு அனுசரணையாக, சம்பவ இடம் சென்று, சாட்சிகளை விசாரிக்காமல் இறுதியறிக்கையை எங்கள் காவல் நிலையத்திலேயே வைத்து தயார் செய்து, தற்போது அதற்கு ஆதரவாக சாட்சி சொல்கிறேன் என்றாலும், ஆஜர் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**